## පාර්ලිමේන්තු මැතිවරණය - 2010

## 1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ විධිවිධාන අනුව වෙනත් ඡනද මධ්‍යස්ථානයක දී ඡන්දය දීම සඳහා පහසුකම් සැලසීම

1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ 127 ආ වගන්තිය අනුව තමාගේ ඡන්ද මධ්‍යස්ථානය පිහිටි ප්‍රදේශයේ පවතින තත්ත්වය හේතු කොට ගෙන එම ඡන්ද මධ්‍යස්ථානයට ගොස් සිය ඡන්දය පාවිච්චි කිරීමට නොහැකි වන ඡන්දදායකයින්ට වෙනත් ඡන්ද මධ්‍යස්ථානයක දී ඡන්දය දීම සඳහා පහසුකම් ඉල්ලා සිටීමට හැකියාව ඇත. ඒ අනුව නාම යෝජනා දැන්වීමේ සිට දින 07 ක් ඇතුළත දී එම අයදුම්පත් මැතිවරණ කොමසාරිස්වරයා වෙත ඉදිරිපත් කිරීමට නියම වී තිබුණි. එහෙත් එම අයදුම්පත් බාර ගැනීමේ කාලය 2010.02.26 දක්වා දීර්ඝ කරන ලදි.

02. එක් එක් මැතිවරණ කොට්ඨාසය යටතේ අදාළ පහසුකම් ලැබීමට සුදුසුකම් ලබා ඇති ඡන්ද හිමියන්ගේ සංඛ්‍යාව ඔවුන් ලියාපදිංචි මැතිවරණ කොට්ඨාස අනුව පහත දැකවේ. එම මුළු සංඛ්‍යාව 45,962 කි.

| | |
|---|---|
| යාපනය මැතිවරණ කොට්ඨාසය | 13,182 |
| වන්නි මැතිවරණ කොට්ඨාසය | 32,422 |
| මඩකලපුව මැතිවරණ කොට්ඨාසය | 55 |
| ත්‍රිකුණාමලය මැතිවරණ කොට්ඨාසය | 32 |
| දිගාමඩුල්ල මැතිවරණ කොට්ඨාසය | 01 |

03. මෙම පහසුකම් ලබා ඇති සෑම ඡන්ද හිමියකුටම වෙන් කරන ලද ඡන්ද පොළ පිළිබඳව දැනුම් දීම සඳහා දැන්වීම්පත් 2010.03.25 වන දින තැපෑලෙන් තම අයදුම්පත් ඉදිරිපත් කර ඇති ලිපිනයට දන්වා යවනු ලැබේ. 2010.03.25 දින සිට පහත සඳහන් ස්ථානවල අවතැන් වූ ඡන්ද හිමියන් වෙනුවෙන් සකස් කර ඇති ඡන්ද හිමි නාම ලේඛන ප්‍රදර්ශනය සඳහා තබනු ඇත.

i. පුත්තලම මැතිවරණ කාර්යාලය
( පුත්තලම දිස්ත්‍රික්කය තුළ ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා පහසුකම් ලබා ඇති අයගේ නාම ලේඛනය)

ii. පුත්තලම දිස්ත්‍රික්කයේ සියළුම ප්‍රාදේශීය ලේකම් කාර්යාල
(පුත්තලම දිස්ත්‍රික්කය තුළ ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා පහසුකම් ලබා ඇති අයගේ නාම ලේඛනය)

iii. වවුනියාව මැතිවරණ කාර්යාලය
(වන්නි හා යාපනය යන මැතිවරණ කොට්ඨාස තුළ ලියාපදිංචි පහසුකම් ලබන ඡන්ද හිමියන්ගේ නාම ලේඛනය )

iv. වවුනියාව ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය
(වන්නි හා යාපනය යන මැතිවරණ කොට්ඨාස තුළ ලියාපදිංචි පහසුකම් ලබන ඡන්ද හිමියන්ගේ නාම ලේඛනය )

v. වවුනියාවේ මැණික් ෆාම් හි පිහිටි සුභ සාධන කඳවුරු
(එක් එක් කඳවුර යටතේ ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා පහසුකම් ලබා ඇති අයගේ නාම ලේඛනය කඳවුර අනුව )

vi. වවුනියාව, යාපනය සහ පොළොන්නරුව යන දිස්ත්‍රික්කවල පිහිටුවා ඇති පුනරුත්ථාපන කඳවුරු
(පුනරුත්ථාපන කඳවුරු යටතේ පහසුකම් ලබා ඇති අයගේ නාම ලේඛනය)

vii. යාපනය දිස්ත්‍රික් මැතිවරණ කාර්යාලය
(යාපනය මැතිවරණ කොට්ඨාසයේ ඡන්ද හිමියන්ගෙන් අදාළ පහසුකම් ලබා ඇති අයගේ නාම ලේඛනය)

viii. මඩකලපුව දිස්ත්‍රික් මැතිවරණ කාර්යාලය
(මඩකලපුව මැතිවරණ කොට්ඨාසයේ ඡන්ද හිමියන්ගෙන් අදාළ පහසුකම් ලබා ඇති අයගේ නාම ලේඛනය)

ix. ත්‍රිකුණාමලයේ දිස්ත්‍රික් මැතිවරණ කාර්යාලය
(ත්‍රිකුණාමලය මැතිවරණ කොට්ඨාසයේ ඡන්ද හිමියන්ගෙන් අදාළ පහසුකම් ලබා ඇති අයගේ නාම ලේඛනය)

x. මන්නාරම මැතිවරණ කාර්යාලය
(මන්නාරම මැතිවරණ කොට්ඨාසයේ ඡන්ද හිමියන්ගෙන් අදාළ පහසුකම් ලබා ඇති අයගේ නාම ලේඛනය)

4. මුලතිව් දිස්ත්‍රික්කයේ නැවත පුද්ගලයින් පදිංචි කර නො මැති ඔඩ්ඩුසුඩාන් (කොටසක්), පුදුකුඩිඉරුප්පු සහ වෙරළබඩපත්තු යන ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසවලට අදාළ ඡන්ද මධ්‍යස්ථාන වෙනුවෙන් ඡන්ද මධ්‍යස්ථාන වවුනියාවේ දෙමළ මධ්‍ය මහා විද්‍යාලයේ පිහිටුවනු ලබන අතර එම ඡන්ද කොට්ඨාසවලට අදාළ නිල ඡන්ද දැන්වීම්පත් 2010.03.25 වන දින සිට අදාළ පුද්ගලයින්ට සිය අනන්‍යතාව තහවුරු කොට වවුනියාව තැපැල් කාර්යාලයෙන් ලබාගත හැකිය.

5. වවුනියාවේ සුභ සාධන කඳවුරු හතක අවතැන් පුද්ගලයින් තවමත් පදිංචිව සිටී. ඊට අමතරව වවුනියාවේ පුනරුත්ථාපන කඳවුරු 09 ක සහ යාපනයේ පිහිටි එවැනි කඳවුරු 02 ක තාවකාලිකව පදිංචිව සිටින ඡන්ද හිමියන්ගෙන් අයදුම්පත් ලැබී ඇත. අදාළ පහසුකම් ඉල්ලා ඇති ඡන්ද හිමියන් වෙනුවෙන් ඡන්ද පොළවල් එම කඳවුරුවල සහ ඒ ආසන්නයේ පිහිටි අරුවිතෝට්ටම් සිවානන්ද විද්‍යාලයේ පිහිටුවනු ඇත.

6. පුත්තලම, අනුරාධපුර, කළුතර, කොළඹ , ගම්පහ සහ කුරුණෑගල යන දිස්ත්‍රික්කවල තාවකාලිකව පදිංචිව සිටින ඉහත පහසුකම් ලබන ඡන්ද හිමියන්ට එම දිස්ත්‍රික්කවල පිහිටුවනු ලබන ඡන්ද පොළවල දී ඡන්දය පාවිච්චි කිරීමට පහසුකම් සළසනු ඇත.

7. කිලිනොච්චිය දිස්ත්‍රික්කයේ , කිලිනොච්චිය, පූනකරී, කණ්ඩාවලෙයි සහ පච්චලෙපල්ලි යන ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසවල පුද්ගලයින් නැවත පදිංචි කර ඇති ග්‍රාම නිලධාරී වසම්වල ඡන්ද මධ්‍යස්ථාන පිහිටුවනු ලබන අතර නැවත පදිංචි කර නොමැති ග්‍රාම නිලධාරී වසම්වලට අදාළ ඡන්ද මධ්‍යස්ථාන කිලිනොච්චිය නගරයේ පිහිටුවීමට කටයුතු කෙරේ.

8. මුලතිව් දිස්ත්‍රික්කයේ තුනුක්කායි, මාන්තායි නැගෙනහිර සහ ඔඩ්ඩුසුඩාන් (කොටසක්) යන ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසවල පුද්ගලයින් නැවත පදිංචි කර ඇති ග්‍රාම නිලධාරී වසම්වල ඡන්ද මධ්‍යස්ථාන පිහිටුවනු ලැබේ. එම ප්‍රදේශයට අදාළ නිල ඡන්ද දැන්වීම්පත් මාන්කුලම්, යෝගපුරම්, නට්ටාන්කන්ඩල්, තුනුක්කායි, කන්දපුරම් සහ පුත්තුවෙට්ටුවාන් යන තැපැල් කාර්යාලවලින් 2010.03.25 වන දින සිට බෙදා හැරීමට කටයුතු කරනු ලැබේ.

9. වවුනියාව, කිලිනොච්චි සහ මුලතිව් යන දිස්ත්‍රික්කවල ඡන්ද හිමියන් වෙනුවෙන් සිය මුල් පදිංචි ස්ථානවල සහ ඊට පරිබාහිර ප්‍රදේශවල පිහිටුවීමට සිදු වී ඇති ඡන්ද මධ්‍යස්ථාන පිළිබඳ විස්තර පහත දක්වා ඇත.

වවුනියාව ඡන්ද ප්‍රදේශයට අයත් ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාස සහ ඒවා අයත් වන ඡන්ද කොට්ඨාස සංඛ්‍යාව පහත දැක්වේ.

| ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාස | ඡන්ද කොට්ඨාස සංඛ්‍යාව | අයත්වන ඡන්ද කොට්ඨාස | ඡන්ද හිමියන්ගේ සංඛ්‍යාව | ගැටළුවක් නොමැති/ නැවත පදිංචි කිරීම අරඹා ඇති නිසා එම ප්‍රදේශවල ඡන්ද මධ්‍යස්ථාන පිහිටුවනු ලබන ඡන්ද කොට්ඨාස අංක | වෙනත් කරුණු |
|---|---|---|---|---|---|
| වවුනියාව උතුර | 12 | 01-12 | 10,878 | 1, 6-12 (8) | මුලු ඡන්ද කොට්ඨාස 91 න් ඡන්ද කොට්ඨාස 81 ක ඡන්ද මධ්‍යස්ථාන අදාළ ඡන්ද කොට්ඨාසවලම පිහිටුවනු ලබන අතර එසේ පිහිටුවීමට නො හැකි ඡන්ද මධ්‍යස්ථාන සංඛ්‍යාව 10 කි. |
| වවුනියාව | 51 | 13-63 | 71,409 | 13-58, 60 (47) | |
| වවුනියාව දකුණ | 09 | 64-72 | 9,490 | (9) | |
| වෙන්ගලචෙට්ටිකුලම් | 17 | 73-89 | 18,713 | (17) | |
| මඩු (කොටසක්) | 02 | 90-91 | 2,444 | | |
| එකතුව | 91 | | 1,12,924 | | |

මුලතිව් ඡන්ද ප්‍රදේශයට අයත් ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාස සහ ඒවා අයත් වන ඡන්ද කොට්ඨාස සංඛ්‍යාව පහත දැක්වේ.

| ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාස | ඡන්ද කොට්ඨාස සංඛ්‍යාව | අයත්වන ඡන්ද කොට්ඨාස | ඡන්ද හිමියන්ගේ සංඛ්‍යාව | ගැටළුවක් නොමැති/ නැවත පදිංචි කිරීම අරඹා ඇති නිසා එම ප්‍රදේශවල ඡන්ද මධ්‍යස්ථාන පිහිටුවනු ලබන ඡන්ද කොට්ඨාස අංක | වෙනත් කරුණු |
|---|---|---|---|---|---|
| මාන්තායි නැගෙනහිර | 5 | 1-5 | 5,618 | 1-5 (5), (6) | මුලු ඡන්ද කොට්ඨාස 50 න් ඡන්ද කොට්ඨාස 17 ක ඡන්ද මධ්‍යස්ථාන අදාළ ඡන්ද කොට්ඨාසවලම පිහිටුවනු ලබන අතර එසේ පිහිටුවීමට නො හැකි ඡන්ද මධ්‍යස්ථාන සංඛ්‍යාව 33 කි. පසුගිය ජනාධිපතිවරණ අවස්ථාවට වඩා අදාළ ඡන්ද ප්‍රදේශවලම පිහිටුවනු ලබන ඡන්ද මධ්‍යස්ථාන සංඛ්‍යාව 6 කි. |
| තුනුක්කායි | 6 | 6-11 | 6,363 | (6) | |
| පුදුකුඩුඉරුප්පු | 7 | 12-18 | 16,980 | | |
| ඔඩ්ඩුසුඩාන් | 10 | 19-28 | 11,382 | 19,20,22,25,26 (5) | |
| වෙරළබඩපත්තු | 22 | 29-50 | 28,386 | 31 (1) | |
| එකතුව | 50 | | 68,729 | | |

කිලිනොච්චි ඡන්ද ප්‍රදේශයට අයත් ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාස සහ ඒවා අයත් වන ඡන්ද කොට්ඨාස සංඛ්‍යාව පහත දැක්වේ.

| ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාස | ඡන්ද කොට්ඨාස සංඛ්‍යාව | අයත්වන ඡන්ද කොට්ඨාස | ඡන්ද හිමියන්ගේ සංඛ්‍යාව | ගැටළුවක් නොමැති/ නැවත පදිංචි කිරීම අරඹා ඇති නිසා එම ප්‍රදේශවල ඡන්ද මධ්‍යස්ථාන පිහිටුවනු ලබන ඡන්ද කොට්ඨාස අංක | වෙනත් කරුණු |
|---|---|---|---|---|---|
| කරච්චි | 42 | 1-42 | 49,305 | 26-33 (8) | මුලු ඡන්ද කොට්ඨාස 95 න් ඡන්ද කොට්ඨාස 61 ක ඡන්ද මධ්‍යස්ථාන අදාළ ඡන්ද කොට්ඨාසවලම පිහිටුවනු ලබන අතර එසේ පිහිටුවීමට නො හැකි ඡන්ද මධ්‍යස්ථාන සංඛ්‍යාව 34 කි. |
| කණ්ඩාවලෛයි | 16 | 43-58 | 18,513 | 43-58 (16) | |
| පූනකරි | 19 | 59-77 | 12,932 | 59-77 (19) | |
| පච්චලෛයිපලෛයි | 18 | 78-95 | 10,061 | 78-95 (18) | |
| එකතුව | 95 | | 90,811 | | |

සැ.යු. කණ්ඩාවලෛයි ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසයේ ඡන්ද මධ්‍යස්ථාන එකක් හැර ඉතිරිවා එක් පොකුරු ඡන්ද මධ්‍යස්ථානයක පිහිටුවනු ඇත. එසේම පච්චලෛයිපල්ලි ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසයේ ඡන්ද මධ්‍යස්ථාන 2 ක් හැර ඉතිරි මධ්‍යස්ථාන පොකුරු ඡන්ද මධ්‍යස්ථානයක පිහිටුවනු ඇත. කරච්චි ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසයේ ඡන්ද මධ්‍යස්ථාන 8 ක් හැර ඉතිරි 34 කිලිනොච්චි නගරයේ පොකුරු ඡන්ද මධ්‍යස්ථානයක පිහිටුවීමට කටයුතු කෙරේ.

10. අවතැන් වූ ඡන්ද හිමියන් වෙනුවෙන් වෙන් කරනු ලබන ඡන්ද පොළවල් පිළිබඳව එම ඡන්ද දායකයින්ට 2010.03.25 වන දින සිට දැන්වීම් කරනු ලැබේ. එසේම, අයදුම්පත් ප්‍රතික්ෂේප වූ අයදුම්කරුවන්ට එම ප්‍රතික්ෂේප කිරීම පිළිබඳව දන්වා යවනු ලැබේ. 2008 වර්ෂයේ ලියාපදිංචි ඡන්ද හිමියකු විසින් ඉදිරිපත් කළ අයදුම්පතෙහි අඩුපාඩු හේතුවෙන් එය ප්‍රතික්ෂේප වී ඇත්නම් එම අයගේ නම ලියාපදිංචි ඡන්ද කොට්ඨාසය වෙනුවෙන් පිහිටුවනු ලබන ඡන්ද මධ්‍යස්ථානයේ දී ඡන්දය පාවිච්චි කිරීමට හැකියාව තිබේ. ඒ බව අයදුම්පත් ප්‍රතික්ෂේප කරමින් අදාළ පුද්ගලයින්ට යවනු ලබන ලිපියේ සඳහන් කෙරේ.

11. වවුනියාවේ සුභ සාධන කඳවුරුවල හෝ වවුනියාව නගරයේ සිට කිලිනොච්චිය සහ මුලතිව් දිස්ත්‍රික්කවල ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා එම ප්‍රදේශවලට ඡන්ද විමසීම් දින යාමට අවශ්‍ය වන (අවතැන් ඡන්ද හිමියන් වශයෙන් වෙනත් ඡන්ද පොළක දී ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා පහසුකම් ලබා නැති) ඡන්ද හිමියන්ට වවුනියාව දිස්ත්‍රික් ලේකම්/ දිස්ත්‍රික් තේරීම්භාර නිලධාරී විසින් ප්‍රවාහන පහසුකම් සැලසීමට කටයුතු කරනු ලබන බැවින් ඒ සඳහා දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය විසින් එම ඡන්ද හිමියන්ගේ තොරතුරු රැස්කරනු ලැබේ. මෙම තොරතුරු වවුනියාව දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලයේ දී සහ වවුනියාවේ සුභ සාධන කඳවුරුවල දී ලබා ගැනීමට කටයුතු පිළියෙල කර ඇත.

12. වවුනියාවේ සුභ සාධන කඳවුරුවල, වවුනියාව නගරයේ සහ කිලිනොච්චිය ප්‍රදේශයේ අවතැන් වූ ඡන්ද හිමියන් වෙනුවෙන් ඡන්ද මධ්‍යස්ථාන පිහිටුවීම පිළිබඳව සහ පුද්ගලයින් නැවත පදිංචි කර ඇති ප්‍රදේශවල පිහිටුවනු ලබන ඡන්ද මධ්‍යස්ථාන සහ නිල ඡන්ද දැන්වීම්පත් බෙදා හරිනු ලබන තැපැල් කාර්යාල සහ මෙබඳු ඡන්ද හිමියන් වෙනුවෙන් ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා යොදා ඇති වැඩ පිළිවෙල පිළිබඳව දැනුවත් කිරීම සඳහා කුඩා පොතක් මුද්‍රණය කොට එම ප්‍රදේශවල බෙදා හැරීමට පියවර ගෙන ඇත. පසුගිය ජනාධිපතිවරණය පැවති අවස්ථාවේ දී ඡන්ද හිමියන් වශයෙන් ලියාපදිංචි අය මෙන්ම එසේ ලියාපදිංචි නො මැති අය ද විශාල වශයෙන් මැතිවරණ දෙපාර්තමේන්තුව විසින් අදාළ ඡන්ද හිමියන්ට නොමිලේ වවුනියාවේ සිට ඡන්ද පොළවල් කරා යාමට ඉඩ සලසන ලද අවස්ථාවේ දී එම ප්‍රවාහන පහසුකම් භාවිතා කිරීම නිසා ගැටළු ඇතිවිය. මෙම තත්ත්වය මග හරවා ගැනීමට ප්‍රවාහන පහසුකම් අවශ්‍ය ඡන්ද හිමියන්ගෙන් එම තොරතුරු ලබා ගැනීමට කල්තියා කටයුතු කරනු ලැබේ.

13. පසුගිය ජනාධිපතිවරණය පැවති අවස්ථාවේ දී වෙනත් ඡන්ද පොළක දී ඡන්දය දීම සඳහා අයදුම්කිරීමෙන් අනතුරුව ඔවුන්ගේ මුල් පදිංචි ස්ථානවලට සමහර ඡන්ද දායකයින්ට නැවත පදිංචිය සඳහා යාමට සිදු වූ නිසා ඔවුන්ට ඡන්දය දීම සඳහා සුභ සාධන කඳවුරු වලට නැවත පැමිණීමට සිදුවිය. මෙම ගැටළුව මෙවර විසඳා ගැනීම සඳහා පියවරක් හැටියට අයදුම්පත් පිළිගත් පුද්ගලයින් නැවත පදිංචි කර ඇති ප්‍රදේශවලට පදිංචිය සඳහා ගොස් ඇත්දැයි ප්‍රාදේශීය ලේකම් මගින් තොරතුරු සොයා ඔවුන්ට පදිංචි ප්‍රදේශයේ ඡන්ද මධ්‍යස්ථානවල දී ඡන්දය පාවිච්චි කිරීමට අවශ්‍ය වැඩ පිළිවෙල යොදා ඇත. මෙම වාර්තා ලබාගැනීම මේ වනවිටත් සිදුවෙමින් පවතී.

දයානන්ද දිසානායක
මැතිවරණ කොමසාරිස්

මැතිවරණ මහලේකම් කාර්යාලය
සරණ මාවත,
රාජගිරිය.

2010 මාර්තු මස 19 වන දින.

## பாராளுமன்றத் தேர்தல் - 2010

### 1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகள்

1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127ஆ ஆம் பிரிவிற்கிணங்க தனது வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் நிலவும் சூழ்நிலை காரணமாக அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாதுள்ள வாக்காளர்கள் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளுக்காக விண்ணப்பஞ் செய்ய முடியும். அதற்கிணங்க பெயர்குறித்த நியமன அறிவித்தல் தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் தேர்தல்கள் ஆணையாளருக்கு அந்த விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தன. ஆயினும் அவ்விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதியானது 2010.02.26 ஆந் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

02. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் கீழும் குறிப்பிட்ட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியைப் பெற்ற வாக்காளர்களின் எண்ணிக்கை, அவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் தேர்தல் மாவட்டங்களுக்கிணங்க கீழே காட்டப்பட்டுள்ளன. அதன் மொத்தத் தொகை 45,962 ஆகும்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் | - | 13,182 |
| வன்னி தேர்தல் மாவட்டம் | - | 32,422 |
| மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் | - | 55 |
| திருகோணமலை தேர்தல் மாவட்டம் | - | 32 |
| திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் | - | 01 |

03. இத்தகைய வசதிகளைப் பெற்றுக்கொண்ட வாக்காளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்களை அறிவிப்பதற்கான அறிவித்தல்கள், அனைத்து வாக்காளர்களுக்கும் அவர்களின் விண்ணப்பப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரிகளுக்கு 2010.03.25 ஆந் திகதி அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள தேருநர் இடாப்புக்கள் 2010.03.25 ஆந் திகதி முதல் கீழ்க்காணும் இடங்களில் பார்வைக்காக வைக்கப்படும்.

- i புத்தளம் தேர்தல்கள் அலுவலகம். (புத்தளம் மாவட்டத்தினுள் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியல்)
- ii புத்தளம் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் அலுவலகங்கள். (புத்தளம் மாவட்டத்தினுள் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியல்)
- iii வவுனியா தேர்தல்கள் அலுவலகம். (குறிப்பிட்ட வசதிகள் வன்னி மற்றும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டங்களினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல்)
- iv வவுனியா பிரதேச செயலாளர் அலுவலகம். (குறிப்பிட்ட வசதிகள் வன்னி மற்றும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டங்களினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல்)
- v வவுனியா மெனிக் பாம் இல் அமைந்துள்ள நலன்புரி நிலையங்கள். (ஒவ்வொரு நிலையத்தின் கீழும் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியல் - நிலையங்களின் அடிப்படையில்)
- vi வவுனியா, யாழ்ப்பாணம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு முகாம்கள். (புனர்வாழ்வு முகாமின்கீழ் வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியல்)
- vii யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் (யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர்களுள் குறிப்பிட்ட வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியல்)

viii மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம். (மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர்களுள் குறிப்பிட்ட வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப் பட்டியல்)



ix திருகோணமலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம். (திருகோணமலை தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர்களுள் குறிப்பிட்ட வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப் பட்டியல்)

x மன்னார் தேர்தல்கள் அலுவலகம். (மன்னார் தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர்களுள் குறிப்பிட்ட வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியல்)

4. முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படாத ஒட்டுசுட்டான் (ஒரு பகுதி), புதுகுடியிருப்பு, கரைதுறைப் பற்று ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படும். அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை 2010.03.25 ஆந் திகதி முதல் வவுனியா அஞ்சல் அலுவலகத்திலிருந்து ஆட்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு பெற்றுக்கொள்ள முடியும்.

5. தற்பொழுதும் வவுனியாவில் 7 நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்தவர்கள் வதிகின்றனர். இதற்கு மேலதிகமாக வவுனியாவில் 9 புனர்வாழ்வு முகாம்களிலிருந்தும் யாழ்ப்பாணத்தில் அவ்வாறான 02 முகாம்களிலிருந்தும் தற்காலிகமாக வதியும் வாக்காளர்களிடமிருந்து விண்ணப்பப்பத்திரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பிட்ட வசதிகளுக்காக விண்ணப்பித்துள்ள வாக்காளர்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அந்த நலன்புரி முகாம்களினுள்ளும் அதன் அருகிலுள்ள அருவித்தோட்டம் சிவானந்த வித்தியாலயத்திலும் அமைக்கப்படும்.

6. புத்தளம், அநுராதபுரம், களுத்துறை, கொழும்பு, கம்பஹா, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தற்காலிகமாக வதிகின்ற மேற்கூறப்பட்ட வசதிகளைப் பெற்றுக்கொண்ட வாக்காளர்களுக்கு அந்த மாவட்டங்களில் அமைக்கப்படும் வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

7. கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி, பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆட்கள் மீள் குடியமர்த்தப்பட்டிருக்கும் கிராம அலுவலர் பிரிவுகளில் வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும். மீள் குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படாத கிராம அலுவலர் பிரிவுகளுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி நகரில் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8. முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் (ஒரு பகுதி) ஆகிய பிரதேச செயலாளர் புரிவுகளில் ஆட்கள் மீள் குடியமர்த்தப்பட்டிருக்கும் கிராம அலுவலர் பிரிவுகளில் வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும். அந்த பிரதேசங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், மாங்குளம், யோகபுரம், நட்டான்கண்டல், துணுக்காய், கந்தபுரம், புத்துவெட்டுவான் ஆகிய அஞ்சல் அலுவலகங்களினூடாக 2010.03.25 ஆந் திகதி முதல் விநியோகஞ் செய்யவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

9. வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் வாக்காளர்களுக்காக அவர்களது சொந்த இடங்களிலும் அதற்கு வெளிப் பிரதேசங்களிலும் வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்க வேண்டியுள்ளன. அதுதொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பிரதேச செயலாளர் பிரிவு | வாக் கெடுப்பு மாவட்டங் களின் எண்ணி க்கை | உரிய வாக் கெடுப்பு மாவட்ட ங்கள் | வாக்கா ளர்களின் எண்ணி க்கை | பிரச்சினைகள் இல்லாத/ மீள் குடியமர்த்தும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதன் காரணமாக அதே பிரதேசத்தில் வாக்கெடுப்பு நிலையங் கள் அமைக்கப்படும் வாக்கெடுப்புமாவட்டங் களின் இலக்கங்கள் | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|
| வவுனியா வடக்கு | 12 | 01-12 | 10,878 | 1,6-12(8) | மொத்த 91 வாக்கெடுப்பு மாவட்டங்களுள் 81 மாவட்டங் |
| வவுனியா | 51 | 13-63 | 71,409 | 13-58,60(47) | ளுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் |
| வவுனியா | 09 | 64-72 | 9,490 | (9) | குறித்த வாக்கெடுப்பு மாவட்டங் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெற்கு | | | | | களிலேயே அமைக்கப்படும். அவ்வாறு அமைக்க முடியாதிருக்கும் நிலையங் களின் எண்ணிக்கை 10 ஆகும். |
| வெங்கள-செட்டிக்குளம் | 17 | 73-89 | 18,713 | (17) | |
| மடு (ஒரு பகுதி) | 02 | 90-91 | 2,444 | | |
| **மொத்தம்** | 91 | | 1,12,924 | | |

- 3 -

முல்லைத்தீவு வாக்கெடுப்புப் பிரிவைச் சேர்ந்த பிரதேச செயலாளர் பிரிவுகளும் அந்த பிரிவுகளுக்கான வாக்கெடுப்பு மாவட்டங்களும் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பிரதேச செயலாளர் பிரிவு | வாக் கெடுப்பு மாவட்டங் களின் எண்ணி க்கை | உரிய வாக் கெடுப்பு மாவட்ட ங்கள் | வாக்கா ளர்களின் எண்ணி க்கை | பிரச்சினைகள் இல்லாத/ மீள் குடியமர்த்தும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதன் காரணமாக அதே பிரதேசத்தில் வாக்கெடுப்பு நிலையங் கள் அமைக்கப்படும் வாக்கெடுப்புமாவட்டங் களின் இலக்கங்கள் | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|
| மாந்தை கிழக்கு | 5 | 1-5 | 5,618 | 1-5(5), (6) | மொத்த 50 வாக்கெடுப்பு மாவட்டங்களுள் 17 மாவட்டங் ளுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் குறித்த வாக்கெடுப்பு மாவட்டங்களிலேயே அமைக்கப் படும். அவ்வாறு அமைக்க முடியாதிருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை 33 ஆகும். கடந்த சனாதிபதித் தேர்தலின்போது அமைக்கப்பட்டதைவிட 6 வாக்கெடுப்பு நிலையங்கள் அதே பிரதேசத்தில் அமைக்கப்படுகின்றன. |
| துணுக்காய் | 6 | 6-11 | 6,363 | (6) | |
| புதுகுடியிருப்பு | 7 | 12-18 | 16,980 | | |
| ஒட்டுசுட்டான் | 10 | 19-28 | 11,382 | 19,20,22,25,26(5) | |
| கரைதுறைப்பற்று | 22 | 29-50 | 28,386 | 31(1) | |
| **மொத்தம்** | 50 | | 68,729 | | |

கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவைச் சேர்ந்த பிரதேச செயலாளர் பிரிவுகளும் அந்த பிரிவுகளுக்கான வாக்கெடுப்பு மாவட்டங்களும் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பிரதேச செயலாளர் பிரிவு | வாக் கெடுப்பு மாவட்டங் களின் எண்ணி க்கை | உரிய வாக் கெடுப்பு மாவட்ட ங்கள் | வாக்கா ளர்களின் எண்ணி க்கை | பிரச்சினைகள் இல்லாத/ மீள் குடியமர்த்தும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதன் காரணமாக அதே பிரதேசத்தில் வாக்கெடுப்பு நிலையங் கள் அமைக்கப்படும் வாக்கெடுப்புமாவட்டங் களின் இலக்கங்கள் | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|
| கரைச்சி | 42 | 1-42 | 49,305 | 26-33(8) | மொத்த 5095 வாக்கெடுப்பு மாவட்டங்களுள் 61 மாவட்டங் ளுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் குறித்த வாக்கெடுப்பு மாவட்டங்களிலேயே அமைக்கப் படும். அவ்வாறு அமைக்க முடியாதிருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை 34 ஆகும். |
| கண்டாவளை | 16 | 43-58 | 18,513 | 43-58(16) | |
| பூநகரி | 19 | 59-77 | 12,932 | 59-77(19) | |
| பச்சிலைப்பள்ளி | 18 | 78-95 | 10,061 | 78-95(18) | |
| **மொத்தம்** | 95 | | 90,811 | | |

**கவனிக்கவும் :**
கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு வாக்கெடுப்பு நிலையம் தவிர்ந்த எஞ்சியவை கொத்தணி வாக்கெடுப்பு நிலையமொன்றில் அமைக்கப்படும். அவ்வாறே பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் 2 வாக்கெடுப்பு நிலையங்கள் தவிர்ந்த எஞ்சியவை கொத்தணி வாக்கெடுப்பு நிலையமொன்றில் அமைச்கப்படும். கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் 8 வாக்கெடுப்பு நிலையங்கள் தவிர்ந்த எஞ்சிய 34 வாக்கெடுப்பு நிலையங்களும் கிளிநொச்சி நகரத்தில் கொத்தணி வாக்கெடுப்பு நிலையமொன்றில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக ஒதுக்கப்படும் வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பாக 2010.03.25 ஆந் திகதி முதல் அறிவிக்கப்படும். அதேபோன்று விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்ட

விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படும். 2008 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளவரொருவரின் விண்ணப்பப்பத்திரத்திலிருந்த குறைபாடுகள் காரணமாக அது நிராகரிக்கப்பட்டிருக்குமாயின், அவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் வாக்கெடுப்பு மாவட்டத்திற்காக அமைக்கப்படும் வாக்கெடுப்பு நிலையத்தில் அவர்களுக்கு வாக்களிக்க முடியும். குறிப்பிட்டவர்களுக்கு விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப்பட்டு அனுப்பப்படும் கடிதத்தில் அதுதொடர்பாக குறிப்பிடப்படும்.



11. வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து அல்லது வவுனியா நகரிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு வாக்களிப்பதற்காக அன்றைய தினம் போகவேண்டியுள்ள வாக்காளர்களுக்கு (இடம்பெயர்ந்த வாக்காளர்களாக வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெறாத) வவுனியா மாவட்டச் செயலாளரினால்/ மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படவிருப்பதனால் அந்த வாக்காளர்கள் தொடர்பான தகவல்கள் மாவட்டச் செயலகத்தினால் சேகரிக்கப்படவுள்ளன. இத்தகவல்களை வவுனியா மாவட்டச் செயலகத்தினூடாகவும் வவுனியா நலன்புரி நிலையங்களினூடாகவும் பெற்றுக்கொள்ளவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12. வவுனியா நலன்புரி முகாம்களிலும், வவுனியா நகரிலும், கிளிநொசிசி பிரதேசத்திலும் இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பாகவும் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைக்கப்படும் வாக்கெடுப்பு நிலையங்கள், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகஞ் செய்யப்படும் அஞ்சல் அலுவலகங்கள், இவ்வாறான வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டம் என்பன தொடர்பாக அவர்களை அறிவூட்டுவதற்காக சிறிய புத்தகமொன்று அச்சிடப்பட்டு அந்த பிரதேசங்களில் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த சனாதிபதித் தேர்தலின்போது குறிப்பிட்ட வாக்காளர்களுக்கு வவுனியாவிலிருந்து வாக்கெடுப்பு நிலையங்களுக்கு போய்வருவதற்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இலவச போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தி வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டவர்களைப்போன்றே அவ்வாறு பதிவு செய்யப்படாதவர்களும் பயணித்ததன் காரணமாக பிரச்சினைகள் உண்டானது. இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக்கொள்வதற்காக போக்குவரத்து வசதிகள் தேவைப்படும் வாக்காளர்களிடமிருந்து நேரகாலத்தோடு அத்தகவல்களை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

13. கடந்த சனாதிபதித் தேர்தலின்போது வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சில வாக்காளர்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஆகவே அவர்கள் வாக்களிப்பதற்காக மீண்டும் நலன்புரி முகாம்களுக்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டது. இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்காக, விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர்கள் மீள் குடியமர்த்தப்படும் பிரதேசங்களில் குடியமருவதற்காக சென்றுள்ளனராவென்று பிரதேச செயலாளர்கள் மூலமாக தகவல்கள் பெறப்பட்டு அவர்கள் வதிகின்ற பிரதேசங்களிலுள்ள வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான திட்டமொன்று செயற்படுத்தப்படவுள்ளன. இவ்வறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2010 மார்ச் மாதம் 19 ஆந் திகதி.

DelNW/w/in/PE10/PrsRel

## பாராளுமன்றத் தேர்தல் - 08.04.2010
## வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்காக வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள விதமும் மேற்கொள்ளப்பட்டிருக்கும் வசதிகளும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்காக செய்யப்பட்டுள்ள வசதிகள் தொடர்பாக அந்த வாக்காளர்களை அறிவூட்டுவதற்காக இவ்வாவணம் வெளியிடப்படுகின்றது. எனவே குறிப்பிட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்லுமுன் இதிலிருக்கும் தகவல்கள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகும்.

01. இந்த பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவிலும் (நிருவாக மாவட்டத்தில்) வன்னி தேர்தல் மாவட்டத்தின் முல்லைத்தீவு வாக்கெடுப்புப் பிரிவிலும் (நிருவாக மாவட்டத்தில்) வவுனியா மாவட்டத்திலும் தற்காலிகமாக வதிகின்ற பெரும்பாலான வாக்காளர்கள் மீள குடியமர்த்தும் பணிகள் முடிவுபெற்றில்லாததன் காரணமாக இந்த ஆவணத்தில் காணப்படும் தகவல்கள் அந்த பிரதேசங்களில் இருக்கும் வாக்காளர்களுக்கே பொருத்தமாகவிருக்கும். அதுதவிர்ந்த வன்னி தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த வவுனியா வாக்கெடுப்புப் பிரிவின் (நிருவாக மாவட்டத்தின்) சிறு பிரதேசத்தில் மீள் குடியமர்த்தல் பணிகள் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டில்லை. அந்த பிரதேசம் தொடர்பான தகவல்களும் இவ்வாவணத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

02. யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்திற்கு வந்து தற்காலிகமாக வதிகின்றவர்கள் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்துள்ள சந்தர்ப்பத்தில் அதற்கான வசதிகளை புத்தளம் மாவட்டத்தினுள்ளும் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

03. புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தகைமையுள்ள வாக்காளர்கள் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்திருப்பார்களாயின் அவர்களுக்கான அவ்வசதிகளை அந்த முகாமினுள்ளேயே ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

04. யாழ்ப்பாண மாவட்டத்தில் கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவு தவிர்ந்த ஏனைய வாக்கெடுப்புப் பிரிவுகளிலிருக்கும் வாக்காளர்களுக்கு போதியளவு போக்குவரத்து வசதிகள் இருப்பதன் காரணமாகவும் யாழ்ப்பாண குடாநாட்டில் பாதுகாப்பான சூழ்நிலை காணப்படுவதன் காரணமாகவும் அந்த பிரதேசத்திலுள்ள வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வழமைப்போல் வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்பட்டுள்ளன. அந்த வாக்காளர்கள், 2008 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதியப்பட்டுள்ள முகவரிகளுக்கிணங்க உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் மூலம் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்களை அறிவிக்கப்படும். தங்களது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கவில்லையாயின், தங்கள் பிரதேசத்திற்கு அஞ்சல் விநியோகஞ் செய்யும் அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

05. **2008 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர் பதியப்பட்டுள்ள வாக்காளர்கள் மாத்திரமே இந்த தேர்தலில் வாக்களிக்கும் தகைமையைப் பெறுகின்றனர். அதில் பெயர் பதியப்பட்டில்லாத ஒருவருக்கு இந்த பாராளுமன்றத் தேர்தலின்போது வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள சட்டத்தில் இடமில்லை.**

06. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127(ஆ) ஆம் பிரிவின்கீழ் தனது வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் நிலவும் சூழ்நிலை காரணமாக அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கை அளிப்பதற்குத் தமக்கு இயலாதுபோகுமென நியாயமாகப் பயப்படுகின்ற வாக்காளரொருவர் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் தனது வாக்கை அளிப்பதற்காக தேர்தல்கள் ஆணையாளரிடம் அனுமதிக் கோருவதற்கு சட்டத்தில் இடமுண்டு. இந்த சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டுவதற்காக தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. அதற்கிணங்க இத்திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்பத்திரங்களை பரீட்சித்துப் பார்த்து அவைகள் தொடர்பாக எடுக்கப்படும் முடிவுகள் 2010.03.30 ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களிலிருந்த முகவரிகளுக்கு தெரிவிக்கப்படும்.

07. விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளரின் பதிவு விபரங்கள் பிழையாகவிருத்தல், விண்ணப்பதாரிகளின் கையொப்பம் விண்ணப்பப்பத்திரத்தில் இல்லாமை, விண்ணப்பப்பத்திரங்கள் கிராம அலுவலர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிராமை ஆகிய காரணங்களுக்காக சில விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்ற தீர்மானம் எடுத்தில்லாத பிரதேசங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பாக குறிப்பிட்டவர்களுக்கு அவர்கள் விண்ணப்பப்பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள முகவரிக்கு அறிவிக்கப்படும். அவ்வாறானவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள (2008 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் வாக்காளரொருவராக பதிவு செய்யப்பட்டிருந்தால்) வாக்கெடுப்பு மாவட்டத்திற்காக அமைக்கப்படும் வாக்கெடுப்பு நிலையத்திலேயே வாக்களித்தல் வேண்டும்.

08. **ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு, வாக்களிப்பதற்காக அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் மாத்திரமே வாக்களிக்க முடியும்.** அவ்வாறானவரொருவருக்கு அவரது சொந்த இடத்தில் அமைக்கப்படும் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாது.

09. வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காக தேர்தல்கள் ஆணையாளரினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள ஆளடையாள ஆவணமொன்றின்மூலம் அனைத்து வாக்காளர்களும் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். 2008 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர் பதியப்பட்டுள்ள வாக்காளரொருவர் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றில்லாதவிடத்தும், அவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். **வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்களின் பெயர்ப் பட்டியலொன்று இவ்வாவணத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.** அந்நிலையங்களில் வாக்களிப்பதற்கான அனுமதி கிடைப்பது வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர்களின் பெயர்ப்பட்டியலில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு மாத்திரமேயாகும்.

10. **வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களில் மீள் குடியமர்த்தும் பணிகள் முற்றுப்பெற்றுள்ள கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்களை அதே பிரதேசங்களில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

11. **மீள் குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள வாக்காளர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், அந்த பிரதேசங்களிலுள்ள அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலம் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.** எனினும், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களில் மீள் குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டில்லாத பிரதேசங்களில் இருக்கின்ற வாக்காளர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி, வவுனியா ஆகிய அஞ்சல் அலுவலகங்களில் வைத்திருக்கப்படும். குறிப்பிட்டவர்கள் 2010.03.25 ஆந் திகதியிலிருந்து அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அங்கிருந்து அவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

12. வன்னி தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த வவுனியா வாக்கெடுப்புப் பிரிவின் ஒருசில வாக்கெடுப்பு மாவட்டங்களில் மீள் குடியமர்த்தும் பணிகள் இன்னும் முற்றுப்பெற்றில்லை. அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களைச் சேர்ந்த வாக்காளர்கள், அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு குறிப்பிட்ட அஞ்சல் அலுவலகத்திலிருந்து அவர்களது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அந்த அலுவலகங்களில் விபரங்கள் இவ்வாவணத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

13. வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய வாக்கெடுப்புப் பிரிவுகளின் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமப் பிரதேசங்கள், அவற்றுக்கான கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் என்பன தொடர்பான விபரங்கள் இவ்வாவணத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் வவுனியா வாக்கெடுப்புப் பிரிவில் மீள் குடியமர்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படாத வாக்கெடுப்பு மாவட்டங்களின் விபரங்களும் இதில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

14. எவராவதொருவருக்கு வவுனியா நலன்புரி முகாமொன்றிலிருந்து அல்லது வவுனியா நகரத்திலிருந்து வாக்களிப்பதற்காக அவரது சொந்த கிராமப் பிரதேசத்திற்கு செல்ல வேண்டியிருக்குமாயின், அதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை செய்துகொடுப்பதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த போக்குவரத்துச் செயற்திட்டம் தொடர்பாக விஷேசமாக வவுனியா நலன்புரி முகாம்களிலிருக்கும் வாக்காளர்களை அறிவூட்டுமாறும் வவுனியா மாவட்டத்தின் அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிவித்தலுக்கிணங்க பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் மாத்திரம் அந்த வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தகைமை பெற்றுள்ளவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை செய்துகொடுப்பதற்கு அம்மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் நடவடிக்கைகளை எடுப்பர். ஆகவே வாக்கெடுப்புத் தினம் அதிகாலையிலேயே குறிப்பிட்ட பயணங்கள் ஆரம்பிக்கப்படும் இடங்களுக்கு சமுகமளிக்குமாறு அறிவுறுத்துரைகள் வழங்கப்படுகின்றன.

15. 2008 ஆம் ஆண்டிற்கான யாழ்ப்பாணம், வன்னி ஆகிய தேர்தல் மாவட்டங்களின் தேருநர் இடாப்புக்களையும் அந்த வாக்கெடுப்புப் பிரிவுகளில் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விபரங்களைக் காட்டும் பெயர்ப்பட்டியல்களையும், தேர்தலுக்கு முன்னர் சுமார் 10 நாட்களைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு வவுனியா நலன்புரி முகாம்களிலும் வவுனியா பிரதேச செயலாளர் அலுவலகத்திலும், வவுனியா அரசாங்க அதிபரின் அலுவலகம்/ வவுனியா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் ஆகிய இடங்களில் குறிப்பிட்ட வாக்காளர்களின் பிரயோசனத்திற்காக பார்வைக்கு வைக்கப்படுமென்பதையும் மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை,
இராஜகிரிய.
2010 மார்ச் மாதம் 15 ஆந் திகதி..

DewNW/w/in/PE/DisPLPolST